**ARTICLE 17 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00037**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 94–102
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# மகாபாரத மறுவாசிப்பில் பூமணியின் கொம்மை

**சிவசங்கரி வி**[1,*]
[1]முனைவர் பட்ட ஆய்வாளர் சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு, India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** சிவசங்கரி வி — sivakrishna2524@gmail.com
**ORCID:** சிவசங்கரி வி https://orcid.org/0009-0004-8471-1148

## Abstract
Among the retellings of the Mahabharata, Poomaṇi's Kommai serves as a reflection of regional traditional knowledge. This article examines the significance of women's voices and the construction of folk elements represented in Kommai. It also explores how Poomaṇi reconstructs the sacred traditions of the Mahabharata and its folk traditions in accordance with his fictional framework. The study further seeks to understand the ways in which classical epic traditions and folk narrative elements are reconfigured through the regional cultural knowledge embedded in the novel.

## ஆய்வுச் சுருக்கம்
மகாபாரத மறுவாசிப்புப் பனுவல்களில் எழுத்தாளர் பூமணியின் கொம்மை, அவர்தம் வட்டார மரபறிவின் பிரதிபலிப்பாக அமைகிறது. கொம்மையில் இடம்பெற்றுள்ள பெண்மொழியின் தேவையையும், நாட்டுப்புறக் கூறுகளின் கட்டமைப்பையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. மகாபாரதத்தின் புனிதத்துவ மரபுகளையும் நாட்டுப்புற மரபுகளையும் பூமணி எவ்வாறு தன் புனைவிற்கேற்ப மறுகட்டமைப்பு செய்திருக்கிறார் என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது

**Keywords / திறவுச் சொற்கள்:** பூமணி; கொம்மை; மகாபாரதம்; மறுவாசிப்பு; நாட்டுப்புறக் கூறுகள்; பெண் கதைமாந்தர்கள்; வட்டார மரபறிவு.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** வி, சி. (2026). மகாபாரத மறுவாசிப்பில் பூமணியின் கொம்மை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

காலம்தோறும் தனக்கான வெளியை விரிவுபடுத்திக் கொள்ளும் பேரிலக்கியமாக மகாபாரதம் விளங்குகிறது. தமிழ்மொழியில் வில்லிபுத்தூரார் பாரதம் தொடங்கி, தற்கால நவீனப் புனைவுகளிலும் மகாபாரதம் தன்னை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. உளவியல், தத்துவம், பெண்ணியம், தலித்தியம், எதார்த்தம், வரலாறு முதலிய கோணங்களில் புதினங்கள் மகாபாரதத்தை விவரிக்கின்றன. அவ்வகையில் எழுத்தாளர் பூமணியின் கொம்மை புதினம் மகாபாரதத்தின் வட்டாரக் கூறுகளோடு புனையப்பட்டுள்ளது. மேலும் மகாபாரதத்தின் வடஇந்திய பதிப்பு, தென்னிந்திய பதிப்பு, இந்திய அளவிலான நாட்டுப்புறக் கூறுகள், தமிழகக் கூத்து மரபுகள் முதலியவற்றிலிருந்து கிடைக்கப்பெறும் தரவுகள் புதினத்தின் புனைவுத் தன்மைக்கு ஏற்றவாறு எடுத்தாளப்பட்டுள்ளன. மகாபாரதப் பெண் கதைமாந்தர்களின் நிலை, மகாபாரதம் தொடர்புடைய நாட்டுப்புறக் கதைக்கூறுகள், மகாபாரத நிகழ்வுகளின் மரபுக் கட்டுடைப்பு முதலியன புதினத்தின் ஆய்வுத் தளங்கள் ஆகும்.

## தமிழில் மகாபாரத இலக்கியங்களின் வரிசையில் கொம்மை

சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் ஆகியவற்றில் மகாபாரதக் கூறுகள் - உவமை, அரசனின் புகழ் உரைத்தல், திருமாலின் மேன்மையைக் கூறுதல் முதலிய நிலைகளில் இடம்பெற்றுள்ளன. வில்லிபாரதம், நல்லாப்பிள்ளை பாரதம் முதலிய காப்பியங்கள் வியாசபாரதத்தைத் தழுவி எழுதப்பட்ட வழிநூல்களாக விளங்குகின்றன. தற்கால இலக்கிய வரிசையில் மகாபாரதம் - கவிதை, சிறுகதை, புதினம் ஆகிய பரிணாமங்களை எட்டியிருக்கிறது. தற்கால இலக்கியங்கள் மகாபாரதத்தைச் சமகாலத் தேவைகள், ஆய்வுகள், மீள்வாசிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரதிபலிக்கின்றன.

புனைவிலக்கியங்கள், மகாபாரதத்தின் மீது எழுப்பப்படும் கேள்விகளுக்கு மகாபாரதத்திலிருந்தும் எழுத்தாளரின் ஆய்வுகள் மற்றும் அனுமானங்களிலிருந்தும் விடை காணும் முயற்சியாக அமைகின்றன. மேலும் காலம்தோறும் கூறப்பட்டு வரும் மகாபாரதத்தின் புனித, வேதாந்தக் கட்டமைப்பை மடைமாற்றம் செய்ய முற்படுகின்றன.

எம். வி. வெங்கட்ராமின் நித்தியகன்னி, எஸ். ராமகிருஷ்ணனின் உபபாண்டவம், இந்திரா பார்த்தசாரதியின் கிருஷ்ணா கிருஷ்ணா, ஜெயமோகனின் வெண்முரசு நாவல் வரிசை முதலிய புதினங்கள் மகாபாரத மறுஆக்கங்களாகவும் மறுவாசிப்பு படைப்புகளாகவும் விளங்குகின்றன. இந்த வரிசையில் 2018-ஆம் ஆண்டு வெளிவந்த பூமணியின் கொம்மை மகாபாரதப் புனைவுகளில் தனக்கென ஒரு தனித்த இடத்தை உருவாக்கியுள்ளது. கொம்மையின் குறிப்பிடத்தக்க கூறுகளாவன:

இயல்பான இலக்கிய நடையும் கரிசல் வட்டார மொழிநடையும் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

நாட்டுப்புறக் கூறுகளான சொலவடைகள், பாடல்கள், கதைகள் ஆகியன இடம் பெற்றுள்ளன.

மகாபாரதமும் ஸ்ரீமத் பாகவதமும் ஒருசேர புனையப்பட்டிருப்பதன்வழி குருவம்ச வரலாறும் கிருஷ்ணனின் மேன்மையும் சமநிலையில் விவரிக்கப்பட்டுள்ளன.

மகாபாரதத்தின் பதினெண் பருவங்களின் சுருக்கமாக இப்புனைவு இருப்பினும் செறிவாகப் பெண் கதைமாந்தர்களின் நிலையை வெளிப்படுத்துகிறது.

பாண்டவர்களில் குந்தியின் மக்கள் முதன்மை பெறும் அதேசமயம் மாத்ரியின் புதல்வனான சகாதேவன் குறித்த நுட்பமான புனைவுகளும் எழுதப்பட்டுள்ளன.

## மகாபாரத பெண் கதைமாந்தர்கள்

பாண்டவர், கௌரவர், பீஷ்மர், கர்ணன், கிருஷ்ணன் முதலானோர் மகாபாரதத்தின் முதன்மைக் கதைமாந்தர்களாக விளங்குகின்றனர். ஆனால் மகாபாரதத்தின் அதிகம் பேசப்படாத பக்கமாகவும் உடைமைச் சமூகத்தின் பிரதிபலிப்பாகவும் விளங்கக்கூடியது பெண் கதைமாந்தர்களின் வாழ்வியல் ஆகும். இப்புதினத்தின் மைய நோக்கம்

மகாபாரதத்தில் காணலாகும் அபலைப் பெண்களை முன் வைத்து மக்கள் மொழியில் மகாபாரதத்தை எழுதுதல் என்று பூமணி குறிப்பிடுகின்றார் (பூமணி, 2023, பக்.9).

மகாபாரதப் பெண்கள் பலதரப்பட்டவர்கள். அப்பெண்களின் வாழ்கையைத் தீர்மானித்த காரணிகளை இரண்டு நிலைகளாகப் பகுத்துக் கொள்ளலாம்.

தனக்கு நேர்ந்த துயரத்தினைச் சகித்துக் கொள்ளுதல்.

துயரத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து அதனைக் கேள்விக்குட்படுத்துதல்; எதிர்த்தல்.

அம்பிகை, அம்பாலிகை, குந்தி, இடும்பி ஆகிய பெண்களின் வாழ்கையைத் தீர்மானித்த முடிவுகள் பிறரால் எடுக்கப்பட்டவை. இப்பெண்கள் முதல் நிலையைச் சேர்ந்தவர்கள்.

அம்பிகை, அம்பாலிகை ஆகியோரது திருமணம் பீஷ்மரால் முடிவு செய்யப்பட்டது; குழந்தைப் பேற்றிற்கான நியோகமுறை சத்தியவதியால் தேர்ந்தெடுக்கப்பட்டது; விருப்பம் இல்லையெனினும் இவ்விரண்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். ‘*அறுதலிக்குப் புத்திரனா, அதென்ன வினோதமான தர்மம்... மறுத்தால் விடவா போகிறீர்கள்.உங்களைச் சார்ந்திருக்கும் எங்களுக்கு வேறு கதியேது’* என அம்பிகை தனது நிலையை எண்ணி நொந்துக் கொள்கிறாள் (பூமணி, 2023, பக்.77).

சூரசேனனின் மகளாகப் பிறந்த பிரதை குந்திபோஜனுக்கு மகளாகத் தத்துக்கொடுக்கப்பட்டாள்; அரசனின் மகளாக இருந்தபோதும் அந்தணர்களுக்குப் பணிவிடை செய்ய நியமிக்கப்பட்டாள்; திருமணத்திற்கு முன்பு பிறந்த குழந்தையைச் சமூகத்தின் மீது கொண்ட அச்சத்தின் காரணமாக ஆற்றொழுக்கில் விட்டாள்; கணவனை இழந்தபின் அஸ்தினாபுரத்தின் மீது தனக்கு உள்ள உரிமையை நேரடியாகக் கேட்க முடியாத நிலையில் தனது பிள்ளைகளின் மூலம் அதை நிலைநிறுத்த முயற்சிக்கிறாள். ‘*காட்டில் வாழும் பிள்ளைகளைக் கறையேற்றி நாடாள வைக்கணுமே, அவர்கள் கட்டுக்கோப்புடன் ஒற்றுமையாக இருந்தால்தான் கறையேற முடியும்’* என்ற எண்ணத்தைச் சுற்றியே குந்தியின் செயல்பாடுகள் அமைந்தன (பூமணி, 2023, பக். 212). இப்படியாகக் குந்தியின் வாழ்வானது தந்தை, வளர்ப்புத் தந்தை, கணவன், பிள்ளைகள் ஆகியோரின் நலனை மையமிட்டே கட்டமைக்கப்பட்டுள்ளது.

பீமன் மீது கொண்ட காதல் காரணமாகத் தனது சகோதரனின் ஆணையையும் புறக்கணித்தவள், இடும்பி. சாலிகோத்திரத்தில் பயமின்றி பாதுகாப்புடன் வாழ்வதற்காக இடும்பியின் துணையைப் பாண்டவர்கள் ஏற்படுத்திக் கொண்டனர் இடும்பியின் மகனான கடோத்கஜன் ராஜசூய யாகத்திற்கு பொருள் திரட்டி வரவும் போரில் பெரும்படையைச் சமாளிப்பதற்காகவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டான் கடோத்கஜனின் விருப்பத்தின் பெயரில் பீமனைக் காண இந்திரபிரஸ்தம் செல்லும் இடும்பி, குந்தியால் அவமதிக்கப்படும் பகுதி (பூமணி, 2023, அத்தியாயம்.94). கொம்மையில் இடம்பெற்றுள்ளது. ‘எனக்குச் சேர வேண்டிய சொத்த அநியாயமாப் பறிச்சு வச்சுக்கிட்டு கண்ணுலகூடக் காட்டமாட்டங்காளே’

என்று அழுது புலம்பும் இடும்பி பீமன் மீது கொண்ட அன்பினால் வஞ்சிக்கப்பட்ட கதைமாந்தராக வெளிப்படுகிறாள் (பூமணி, 2023, பக். 317). ஆறுமாத காலம் மட்டுமே கிடைத்த அன்பிற்காக வாழ்க்கை முழுக்கவும் பீமனின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு இன்னல்களை ஏற்றுக்கொள்கிறாள்.

அம்பை, திரௌபதி, சாவித்திரி, தமயந்தி முதலானோர் தனக்கு நேர்ந்த நிலையினை 'விதிப்பயன்' என்று ஏற்றுக்கொள்ளாமல் கேள்விக்குட்படுத்தும் கதைமாந்தர்களாக விளங்குகின்றனர். அம்பை, திரௌபதி ஆகியோர் தன் நிலையை மாற்றி அமைப்பதற்கான முயற்சியில் போராட்டங்களையும் இன்னல்களையும் தோல்வியையும் கடந்து வெற்றியடைகின்றனர். சாவித்திரி, தமயந்தி ஆகியோர் துயர்நிலை கண்டு துவளாமல் மனத்திடத்துடனும் மதிநுட்பத்துடனும் போராடி வெற்றியடைகின்றனர்.

விசித்திரவீரியனுக்குத் திருமணம் செய்து வைப்பதற்காகப் பீஷ்மரால் கவர்ந்து வரப்பட்ட அம்பை, தனது வாழ்க்கைத் துணையை (சால்வ மன்னன்) ஏற்கனவே தீர்மானித்தவளாக இருக்கிறாள். ஆனால் சத்திய விரதத்தின் பெயரிலும் சத்திரிய தர்மத்தின் பெயரிலும் பீஷ்மராலும் சால்வனாலும் அலைக்கழிக்கப்படுகிறாள். '*தம்பிக்காக சுயம்வரத்துக்கு வந்து கலந்துக்கிறவன் எப்படிச் சத்திரியனாருக்க முடியும். காதலிச்ச ஒரு பொண்ணக் கைவிட்றவன் சத்திரியன்னு எப்படி மார்தட்டிக்கிற முடியும்.*' (பூமணி, 2023, பக்.69) என்று அம்பை எழுப்புகின்ற கேள்வி, பெண்களைத் துச்சமாகக் கருதும் ஆண் சமூகத்தின் மீது வைக்கப்படும் கேள்வியாகும். நியாயம் கிடைக்காது தோற்றுப்போன அம்பை, சிகண்டியாகப் பழிதீர்த்துக் கொள்கிறாள். பெண்ணின் ஆழ்மன வைராக்கியம் கண்டவெற்றியாக அம்பை - சிகண்டி விளங்குகின்றனர்.

திரௌபதியைப் பூமணி வனவாசிப் பெண்ணுக்குப் பிறந்தவளாக புனைந்துள்ளார். அர்ஜுனனுக்கு மாலையிட்டாலும் பாண்டவர் ஐவருக்கும் குந்தியின் சொல்லை முன்னிட்டு மனைவியாகிறாள்; வனவாசத்தின் போது பாண்டவர்களின் ஒற்றுமையைப் பேணுகிறாள்; வனவாசிகளுக்குரிய வீரமும் தற்காப்புத் தன்மையும் அவளிடம் இயல்பாகவே வெளிப்படுகிறது; கௌரவர் சபையில் அவமதிக்கப்படும் திரௌபதிக்குத் தன்னைப் பாதுகாக்கப் பாண்டவரோ கிருஷ்ணனோ தேவைப்படவில்லை என்கிற பூமணியின் மரபுக்கட்டுடைப்பு குறிப்பிடத்தக்கது. '*சீச்சீ, பொழச்சுப் போடா மூடனே! அவனுக்கு அபயமளித்து முழு ஆடையில் உடம்பை மறைத்துக் கொள்கிறாள். சபையினரைக் காளியின் ருத்ரகோலத்தில் கம்பீரமாக பார்க்கிறாள்*' (பூமணி,2023,பக்.329). கௌரவர் சபையில் தான் செய்த சபதத்தில் திரௌபதி வெற்றி பெறுகிறாள். இருப்பினும் தனது பிள்ளைகளுக்குத் தாய்ப்பாசம் காட்ட முடியாத நிலையிலும் பாண்டவர் ஐவரிடமும் ஒரே தன்மையிலான அன்பை வெளிப்படுத்தி எதிரஅன்பைப் பெறமுடியாத நிலையிலும் தோற்றுப்போகிறாள்.

மேற்குறிப்பிட்ட கதைமாந்தர்கள் மட்டுமின்றி கங்கை, அம்பிகையின் பணிப்பெண் சிவை, சுபத்திரை, யயாதியின் மகள் மாதவி, காண்டவ வனத்தின் நெருப்பிலிருந்து தன் பிள்ளைகளை மீட்ட பெண் பறவை ஜரிதை

முதலானோரைச் சமூகத்தில் உள்ள பல நிலைப்பட்ட பெண்களின் பிரதிநிதிகள் என்று கொள்ளலாம்.

பூமணி மகாபாரதப் பெண்களின் பேச்சு வெளியை விரிவுபடுத்தியுள்ளார். சான்றாக, கங்கை - சத்தியவதி உரையாடல், சகாதேவன் - பாஞ்சாலி உரையாடல் ஆகிய பகுதிகளைக் குறிப்பிடலாம்.

சத்தியவதி, குந்தி, மாதவி ஆகிய கதைமாந்தர்களின் மூலம் பெண்ணின் கன்னித்தன்மை மீது ஏற்றி வைக்கப்பட்ட புனிதம் உடைகிறது. சத்தியவதி, குந்தி ஆகியோர் முறையே பராசரர் மற்றும் சூரியன் மூலம் கன்னிகாபுத்திரரைப் பெறுகின்றனர்; குழந்தை பெற்றபின் மீண்டும் கன்னியாவாய் என்ற வரத்தையும் பெறுகின்றனர். மாதவி நித்தியகன்னி எனும் வரத்தைப் பெற்றவள்; காலவ முனிவனின் குருதட்சணைக்காக அரியசுவன், திவோதாசன், உசீநரன் ஆகிய மூன்று அரசர்களுக்கும் விசுவாமித்திரருக்கும் மனைவியாகி பிள்ளைகளைப் பெற்றுத் தர வலியுறுத்தப்படுகிறாள்.

இக்கதைமாந்தர்களின் வழி மகாபாரதம் தோன்றிய காலத்தின் சமூகம், ஆண் மையச் சமூகம் என்பதும் அச்சமூகம் பெண்களை நுகர்வு பொருளாகவும் உடைமையாகவும் உற்பத்திக்கருவியாகவும் பயன்படுத்தியுள்ள தன்மையும் புலனாகிறது.

## மகாபாரதம் சார்ந்த இந்திய நாட்டுப்புறக் கூறுகள்

மகாபாரதம் ஏட்டுப் பிரதியாக மக்களிடம் பரவியதைக் காட்டிலும் வாய்மொழி வழக்காகவும் நிகழ்த்துக்கலைகள் மூலமாகவும் அதிகம் பரவியிருக்கிறது. மகாபாரதம் - அது வழங்கப்படும் நிலத்தின் பண்பாட்டோடும் மக்களின் நம்பிக்கைகளோடும் இணைக்கப்பட்டு புதிய வடிவம் கொள்கிறது. படைப்பாளிகளும் மகாபாரதத்தை தங்கள் மொழியில் வெறுமனே மொழிபெயர்ப்பதைக் காட்டிலும் தமது மொழி மற்றும் பண்பாட்டு கூறுகளின் தழுவலாகப் படைப்பதையே விரும்பியிருக்க வேண்டும். சான்றாக, தமிழின் வில்லிபாரதம், ஒடியாவின் சரளா மகாபாரதம் முதலியவற்றைக் குறிப்பிடலாம். மேலும் ஸ்கந்தபுராணம், பத்மபுராணம் முதலிய புராணங்களின் சில கூறுகள் வியாசபாரத நிகழ்வுகளை வேறுவடிவத்தில் முன்வைக்கின்றன.

எழுத்தாளர் பூமணியின் கொம்மை, கரிசல் வட்டார மொழி நடையும் இந்திய அளவிலான மகாபாரதம் தொடர்புடைய நாட்டுப்புறக் கூறுகள் சிலவற்றையும் உள்ளடக்கிப் புனையப்பட்டுள்ளது.

## அரவான்

பிரம்மச்சரிய விரதம் ஏற்று வனவாசம் மேற்கொண்டிருந்த அர்ஜுனனுக்கும் நாககன்னிகை உலூபிக்கும் பிறந்த மகன். வியாசபாரதத்தின் அடிப்படையில் அரவான் எட்டாம் நாள் போரில் ஆர்ஸ்யஸ்ருங்கி (அலம்புஷன்) என்கிற ராட்சதனால் கொல்லப்படுகிறான் (இராமானுஜாசாரியர்,ம.வீ. 1919, பக்.353). வில்லிபாரதத்தின் அடிப்படையில் போருக்கு முந்தையநாள் அரவான் காளி முன்பு தன் உறுப்புகளை அறுத்து பலியிட்டுக் கொள்கிறான் (கிருஷ்ணமாச்சாரியர்,சே. 1966, பக்.324). வில்லிபாரதத்தின் இக்குறிப்பு ‘நவகண்டம்’ எனும் போரியல் உயிர்

பலிச்சடங்கோடு ஒப்புநோக்கத்தக்கது. கொம்மையில் கிருஷ்ணனின் உபாயத்தின்படி அரவான் போரின் பத்தாம் நாள் பலியிடப்படுகிறான்.

வியாசபாரதம் – வில்லிபாரதம், இவ்விரண்டிலும் அரவானின் திருமணம் பற்றிய செய்தி இடம்பெறவில்லை. *'அரவானின் ஆசையை நிறைவேற்ற மோகினி அவதாரம் எடுத்துக் கிருஷ்ணன் அவனை மணந்துக் கொண்டான்'* என்பது நாட்டுப்புற மரபாகும். அரவானை மணந்துக் கொண்டவள், போர்வீரர்களைத் திருப்திப்படுத்த அழைத்து வரப்பட்ட பெண்களில் ஒருத்தி என்றும் அவளது பெயரைக் கூட அரவான் அறிந்திருக்கவில்லை என்றும் பூமணி தன் புதினத்தில் புதிய கோணத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

பலியிடப்படும் முன் அரவான், போரில் பகைவர்கள் இறந்த பின்னரே தன் உயிர் போகவேண்டும் என்கிற வரத்தைக் கிருஷ்ணனிடம் வேண்டிப் பெற்றுக்கொள்கிறான். இச்செய்தி வில்லிபாரதத்தில் இடம் பெறுகிறது.

ஸ்கந்த புராணத்தின் கௌமாரிக காண்டத்தில் கடோத்கஜனின் மகனான பர்பரீகன் பற்றிய செய்தி இடம் பெறுகிறது. பிரம்மாவின் சாபத்தினால் பிறப்பெய்திய யட்சனான பர்பரீகன், கிருஷ்ணனின் சுதர்சன சக்கரத்தால் தலை கொய்யப்பட்ட பிறகு விமோசனம் அடைகிறான். சண்டிகா எனும் தெய்வத்தின் அருளால் அமுதம் தெளிக்க பெற்று அவனது தலை உயிர் பெறுகிறது.மேலும், போர் நிகழ்ச்சிகளை மலையின் உச்சியிலிருந்து காண்கிறது.

அரவான் தமிழக மரபிலும் பர்பரீகன் – காட்டு ஷ்யாம் என்கிற பெயரில் ராஜஸ்தான் மரபிலும் நாட்டார் தெய்வங்களாக விளங்குகின்றனர். இருவரது கதையுமே போருக்கு முந்தைய உயிர்ப்பலி என்பதை மையமிட்டது. இவ்விரு மரபுகளையும் இணைத்து பூமணி போரின் பத்தாம் நாள் பலியிடப்பட்ட அரவானின் தலை உயிரூட்டப் பெற்று வன்னிமரத்தின் மேலே வைக்கப்பட்டதாகவும் மீதமுள்ள எட்டு நாள் போரையும் பாண்டவர்கள் வெற்றியையும் கண்ட பிறகு உடலுடன் பொருத்தப்பட்ட தலை உயிரிழந்ததாகவும் புனைந்துள்ளார். இவ்விரு தெய்வங்களின் தலை மட்டுமே வழிபாட்டு மூலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பொன்னுருவி

தமிழக நாட்டுப்புறக் கதை மரபுகளில் கர்ணனின் மனைவியாகப் பொன்னுருவி சுட்டப்படுகிறாள். கர்ணமோட்சம் (நாடகம்), பொன்னுருவி மசக்கை (அம்மானை) ஆகியவற்றில் பொன்னுருவி பற்றிய குறிப்பு கிடைக்கிறது.

இவ்விரு இலக்கியங்களிலும் பொன்னுருவியின் நாடு இன்னதென்ற குறிப்பு இடம் பெறவில்லை. பூமணி பொன்னுருவியைப் புகேய நாட்டு மன்னன் வகுசன் மகள் என்று குறிப்பிடுகிறார். (பூமணி, 2023, பக். 470) எழுத்தாளர் கவிதா கானே, (Kavita Kane) கர்ணனின் மனைவி ( karna’s wife: the outcast’s queen)என்கிற புதினத்தில் உருவியைப் புகேய நாட்டு இளவரசியாகக் குறிப்பிடுகிறார்.

தமிழக நாட்டுப்புற மரபில் பொன்னுருவி கர்ணனைச் சத்திரியன் எனக் கருதி மணக்கிறாள்; சூதக்குலத்தவன் என்கிற காரணத்தால் கர்ணனை வெறுக்கின்ற பொன்னுருவி, அவனைக் குந்தியின் மகன் என்று அறிந்த

பிறகு ஏற்றுக்கொள்றாள். கவிதா கானேவின் படைப்பில் சூதக்குலத்தவன் என்று அறிந்தும் கூட காதலின் காரணமாக, உருவி கர்ணனை மணக்கிறாள்; எல்லா நிலைகளிலும் அவனுக்கு உறுதுணையாக இருக்கிறாள்.

பொன்னுருவி கர்ணனைப் புறக்கணித்ததன் காரணமாகக் காஞ்சனமாலை என்கிற சூதப்பெண்ணைத் துரியோதனன் கர்ணனுக்குத் திருமணம் செய்து வைப்பதாகவும் அவளே கர்ணனுக்கு எல்லா நிலைகளிலும் துணையாக உடன் இருப்பதாகவும் பூமணி புனைந்துள்ளார். மேற்கண்ட தரவுகளின் அடிப்படையில் தமிழக நாட்டுப் புற மரபையும் நவீன புனைகதை மரபையும் இணைத்து பொன்னுருவி கதாபாத்திரத்தைப் பூமணி படைத்திருக்கிறாரா என்பது மேலும் ஆராயத்தக்கது.

## புளியமரத்தின் சாபம்

மகாபாரதம் மற்றும் பாகவதம் ஆகிய நூல்களில் கிருஷ்ணனுக்கு இணக்கமான கோபிகை என்ற அளவில் மட்டும் குறிப்பிடப்படும் ஒரு கதாபாத்திரம், ராதா. தன் பாதத்தைக் காயப்படுத்திய புளியமரத்திற்கு ராதா, அதன் பழங்கள் முற்றிலும் பழுக்கும் முன்னரே உதிர்ந்து விடும்படி சாபமிடுகிறாள்.

கிருஷ்ணன் துவாரகையை உருவாக்கும் முன் தனது இளமைக் காலங்களைக் கழித்த பகுதி விரஜபூமி (Braj bhoomi) என்று குறிப்பிடப்படுகிறது. தற்போதைய உத்தரபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக விரஜபூமி குறிப்பிடப்படுகிறது. விரஜபூமியின் வட்டார மரபுகளில் காணலாகும் இம்லி தாலாவின் ( imli thala : புளியமரம்) இக்கதை வடிவம் கொம்மையில் இடம்பெற்றுள்ளது.(பூமணி, 2023, பக்.581)

தமிழ்நாடு, ராஜஸ்தான், வங்காளம் முதலிய பகுதிகளின் வாய்மொழி மரபுகளில் சில கொம்மையில் எடுத்தாளப்பட்டுள்ளன. பூமணி மகாபாரதம் தொடர்புடைய இந்திய அளவிலான நாட்டுப்புறக் கூறுகளில் தனது புனைவியல் கூறுகளையும் இணைத்து புதிய கதைக்களத்தை உருவாக்கியிருக்கிறார் என்று கருதலாம். எனவே, கொம்மையில் இடம்பெற்றுள்ள மகாபாரதத் தரவுகளை எழுத்து மரபிலானவை, வட்டார வழக்குகள், புனைவு நிலைப்பட்டவை என தரம் பிரித்துக் கொள்ளுதல் அவசியமாகிறது.

## பூமணியின் கற்பனைக் களங்கள்

கொம்மையில் பூமணி மகாபாரதத்தின் சில பகுதிகளைக் கற்பனையாகச் சித்தரித்திருக்கிறார். அவைகளில் சில பின்வருமாறு:

பாண்டவர்களின் தந்தையராக அஸ்தினாபுரத்தைச் சேர்ந்த விதுரன், திருதராஷ்டரன், கிருபர், தௌமியர் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். பீமனைக் கொல்லும் மனநிலையிலுள்ள திருதராஷ்டிரனும், உபபாண்டவர்களைக் கொல்லுவதற்குத் துணைநிற்கும் கிருபரும் இப்புனைவிற்கு முரணாகின்றனர். மேலும் பாஞ்சாலியின் சுயம்வரத்தின் போது பாண்டவர்களுக்குப் புரோகிதராகின்ற தௌமியர் அவர்களின் பிறப்புக்குக் காரணமாக அமைகிறார் என்பதும் முரணைத் தோற்றுவிக்கிறது.

கிருஷ்ணனைப பூமணி இறைவனாகவும் இயல்பான மனிதனாகவும் இருநிலைகளில் காட்சிபடுத்துகிறார். திருமாலின் அவதாரமாகவே இருப்பினும் மனிதனுக்குரிய இயல்புகளோடு விளங்கும் கிருஷ்ணனைப் பூமணி புதினத்தின் பிற்பாதி பகுதிகளில் முதன்மைப்படுத்தியிருக்கிறார். பாஞ்சாலியின் மானம் காத்தல், விஷ்வரூபம் எடுத்தல், கீதை உபதேசித்தல், மோகினி அவதாரம் எடுத்தல் போன்ற நிகழ்வுகள் கொம்மையில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

‘அசுவமேத யாக குதிரையைப் பாதுகாக்கும் பொருட்டு வீரர்களோடு செல்லும் அர்ஜுனன் எதிர்கொள்ளும் கவுரிவனம் தனக்குள் நுழைகின்ற அனைத்தையும் பெண்களாக மாற்றக்கூடியது’ எனும் கதைப்பகுதி கொம்மையில் இடம்பெற்றுள்ளது (பூமணி, 2023, பக்.542). இக்கதையின் நாட்டுப்புறப் பின்னணியை அடையாளங்காண இயலவில்லை. எனவே இதனைப் பூமணியின் கற்பனையாகக் கொள்ள இடமுண்டு

அசுவமேதச் சடங்குகள் பற்றிய பூமணியின் விவரணை மாறுபட்ட கோணத்தில் உள்ளது. அவ்விவரணைகளின் மூலம் ஆராயத்தக்கது.

சொர்க்கத்தை அடைந்த தருமரும் வைகுண்டத்தில் இருக்க வேண்டிய கிருஷ்ணனும் தன் உற்றார் இருக்கும் நரகத்திலேயே இருக்க விரும்பும் புதினத்தின் நிறைவு பகுதி, சொர்க்கம் என்பது நாம் விரும்புகிறவர்கள் இருக்கும் இடம்தான் எனும் கருத்தை முன்னிறுத்துவதாக அமைகிறது.

## முடிவுரை

மகாபாரத மறுஆக்கங்களில் பூமணியின் கொம்மை வெளிப்படுத்துகின்ற மாற்றுச் சிந்தனைகளை இக்கட்டுரை முன்வைத்திருக்கிறது. மகாபாரதத் தொடர்புடைய நாட்டுப்புறக் கூறுகளும் மகாபாரதப் பெண் கதைமாந்தர்களின் பெண்ணிய மொழியும் புதினத்தில் இடம்பெற்றுள்ள தன்மை ஆராயப்பட்டுள்ளது. நவீனப் புனைவுகளில் காணலாகவும் வாய்மொழி கூறுகளின் தாக்கத்திற்கு இப்புதினம் சான்றாக அமைகிறது. இதிகாச அடிப்படையிலான பூமணியின் கொம்மையிலும் பூமணியின் பிற படைப்புகளிலும் இடம்பெற்றுள்ள கூறுகளை ஒப்பிட்டு எதிர்கால ஆய்வுகள் அமையலாம்.

## துணைநூற் பட்டியல் (References)

1. தமிழ் நூல்கள்
2. இராமானுஜாச்சாரியார்,ம.வீ.(ப.ஆ.). ஸ்ரீ மகாபாரதம் – பீஷ்ம பர்வம், கணேஷா பிரஸ், 1919.
3. கிருஷ்ணமாச்சாரியர், சே., கோபாலகிருஷ்ணமாச்சாரியர், வை.மு. (ப.ஆ.). ஸ்ரீவில்லிபுத்தூரார் பாரதம் – உத்தியோக பருவம், வை.மு. கோபாலக்ருஷ்ணமாச்சார்யர் கம்பெனி, 1966.
4. புகழேந்திப் புலவர். பொன்னுருவி மசக்கை, Roja Muthaiah Research Library, https://rmrl.in/ta/dl/books/10017, accessed on September 14, 2026.
5. பூமணி. கொம்மை, டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ், 2023
6. முனிசாமி முதலியார்(ப.ஆ). பதினேழாம் போர் என்னும் கர்ண மோக்ஷ நாடகம், மதராஸ் டைமண்ட் அச்சுக்கூடம், 1910
7. ஆங்கில நூல்கள் மற்றும் இணையக் கட்டுரைகள்
8. Idaya Rani, C., Subbulakshmi, M. “A Critical Analysis of Kavita Kane’s Karna’s Wife: the Outcast’s Queen -A Humanistic Approach”, https://www.researchgate.net/publication/353734481, accessed on September 14, 2026.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

9. Pattanaik Devdutt. Jaya : An illustrated retelling of the Mahabharata, Internet Archive, https://dn790003.ca.archive.org, accessed on September 14, 2026
10. Prasad, Dev. Krishna: A Journey through the lands & legends of Krishna, GoogleBooks,https://books.google.co.in/books?id=o0_5caqiUH0C&pg=PT137&source=gbs_selected_pages&cad=1#v=onepage&q&f=false, accessed on September 14, 2026.
11. Skanda purana, wisdom library, https://www.wisdomlib.org/hinduism/book/the-skanda-purana, accessed on September 14, 2026.

© 2026 சிவசங்கரி வி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..